**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | SC NO. 76/2021 |
| Deposition of witness for | : | PW : 17 |
| Name | : | திரு. சங்கையா |
| Father's / Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **13.11.2024**

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம் கூடல்புதூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணிநிறைவு பெற்றுவிட்டேன். தற்போது திருமங்கலத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். 27.01.2020 ம் தேதி நான் எம்.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது, இரவு சுமார் 23.00 மணிக்கு மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலைப் பெற்று உடன் சென்று வார்டு எண் 103 ல் சிகிச்சையில் இருந்த சின்னச்சாமி மனைவி

அங்கம்மாள் என்பவரை பார்க்க, அவர் மயக்க நிலையில் இருந்தார். அங்கம்மாள் கணவர் சின்னச்சாமி என்பவரை விசாரிக்க அவர் கைப்பட எழுதிக்கொடுத்த புகார் மனுவைப் பெற்று, 28.01.2020 ம் தேதி காலை 06.00 மணிக்கு நிலையம் வந்து புகார் மனுவிற்கேற்ப எம்.கல்லுப்பட்டி காவல்நிலைய குற்ற எண்.21/2020 பிரிவு 294(b), 324, 506(ii) of IPC & 4 of TNPWH ACt படி வழக்கு பதிவு செய்தேன். அந்த புகார் அதசாஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. **அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை அதசாஆ.4.** காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சி மாரியப்பன், பெத்தணன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு மாதிரிவரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து பார்வைமகஜரிலும், மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று நானும் கையெழுத்திட்டேன். **பார்வை மகஜர் அதசாஆ.5, மாதிரி வரைபடம் அதசாஆ.6.** தொடர்ந்து சாட்சிகள் சின்னச்சாமி மதன் மோகன் என்ற மோகன், மாரியப்பன், செல்வரதி மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து அவர்களது வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்பு நிலையத்தில் இருக்கும் போது காலை 11.00 மணிக்கு சிகிச்சையில் இருந்த அங்கம்மாள் என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக தகவல்

கிடைத்தது. அதன் அடிப்படையில் சட்டப்பிரிவுகளை 294(b), 324, 506(ii) of IPC & 4 of TNPWH Act @ 294(b), 324, 506(ii)இ 302 of IPC & 4 of TNPWH Act ஆக மாறுதல் செய்தேன். மேல்விசாரணைக்காக வழக்குக் கோப்பை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

25.01.2020 ம் தேதியன்று எங்கள் காவல்நிலையத்திற்கு இறந்து போன அங்கம்மாள் சின்னச்சாமியால் அழைத்து வரப்பட்டார் என்றால் சரியல்ல. எங்கள் காவல்நிலையத்திற்கு வந்த அங்கம்மாளுக்கு அரசு மருத்துவமனைக்கு செல்லுமாறு நான் அறிவுறுத்தல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தமாக முதன் முதலில் வந்த தகவல், அரசு இராஜாஜி மருத்துவமனையில் இருந்து வந்த தகவல் தான் என்றால் சரிதான். மேற்படி தகவலானது எனக்கு வான் செய்தி மூலம் வந்தது. அந்த தகவல் இராஜாஜி மருத்துவமனையில் உள்ள காவல்நிலையத்திலிருந்து வந்தது என்றால் சரிதான். எங்கள் காவல்நிலையத்தில் வான் செய்தியை பெறுவதற்கும், அனுப்புவதற்கும் தனியாக ஒரு பதிவேடு உள்ளது என்றால் சரியல்ல. 27.01.2020 ம் தேதி வந்த தகவலை பதிவு செய்தேன் என்றால் பதிவேடே கிடையாது. அரசு சம்பந்தமாக வரும் தகவல்களை பொது நாட்குறிப்பில் பதிவு

செய்ய வேண்டும் என்றால் சரிதான். இந்த வழக்கில் வந்து வான் செய்தி அரசு சம்பந்தப்பட்டது என்றால் சரிதான். இந்த வான்செய்தியை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்தேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எழுத்துப்பூர்வமாக எழுதப்பட்ட ஆவணம் பொதுநாட்குறிப்பு என்றால் சரிதான். அங்கம்மாள் இருந்த 103 வார்டிற்குரிய மருத்துவரிடம் அங்கம்மாள் பேச முடியாத நிலையில் இருக்கிறார் என்று சான்றிதழ் எதுவும் பெறவில்லை. சின்னச்சாமி ஏற்கனவே புகார் எழுதி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. நான் சென்ற பின்னர் தான் புகார் எழுதினார். அது என் அறிவுரையின் படி எழுதப்பட்டது என்றால் சரியல்ல. அங்கம்மாள் குறித்த இறப்பு தகவல் எழுத்துப்பர்வமாக நான் பெற்றேன். அந்த எழுத்துப்பூர்வமான தகவலை ஆய்வாளரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது சாட்சிகளிடம் விசாரணை செய்தேன் என்பதை சொல்லவில்லை என்றால் சரியல்ல. எம்.கல்லுப்பட்டியில் அரசு மருத்துவமனை இல்லை. ஆனால் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. என் விசாரணையில் 25.01.2020 ம் தேதி எம்.கல்லுப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு அங்கம்மாள் சென்றாரா என்ற விபரத்தை தெரிந்து கொள்ளவில்லை. உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அங்கம்மாள் அழைத்து செல்லப்பட்டாரா என்ற விபரத்தை தெரிந்து கொள்ளவில்லை. அங்கம்மாள் 25.01.2020 அன்று எம்.கல்லுப்பட்டி, உசிலம்பட்டி அரசு மருத்துவமனை ஆகிய மருத்துவமனைக்கு

இறந்து போன அங்கம்மாள் சென்று முதல் சிகிச்சை பெற்றார் என்றும், அந்த மருத்துவமனையிலுள்ள ஆவணங்கள் இந்த வழக்கிற்கு எதிராக இருக்கிறது என்பதால், நான் அந்த மருத்துவமனைக்கு அங்கம்மாள் சென்றதை மறைத்து பதிலளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னசாமி தான் அவர் கைப்பட புகாரை எழுதினாரா அல்லது வேறு யாரும் எழுதினார்களா என்ற விபரம் எனக்குத் தெரியாது. அதசாஆ.1 புகாரில், 25.01.2020 ம் தேதி எங்கள் காவல்நிலையத்திற்கு என் மனைவியை அழைத்துச் சென்று, காவல்நிலையத்தில் இருந்த உதவி ஆய்வாளரிடம் நடந்த விபரத்தை சொன்னதாகவும், அவரது உடல்நிலை மோசமாக உள்ளது, அங்கம்மாளை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று கூறியதாக புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எம்.கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் உதவியாளராக நானும், சிறப்பு சார்பு ஆய்வாளராக மூன்று பேரும் பணியாற்றி வந்தோம், அந்த புகார்தாரர் தகவலை சொன்ன உதவி ஆய்வாளர் நான் தான் என்றும், தற்போது மறுத்து சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. உசிலம்பட்டி பாலா மருத்துவமனையில் அங்கம்மாள் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் அந்த விபரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியாது. மதுரை வி.என் மருத்துவமனையில் அங்கம்மாள் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் அந்த விபரம் எனக்குத் தெரியும் என்றால் தெரியாது. உசிலம்பட்டி பாலா மருத்துவமனை மற்றும் வி.என் மருத்துவமனை அதிகாரிகளை

நான் விசாரிக்கவில்லை. புகார்தாரர் சின்னச்சாமியிடம் புகாரைப் பெற்று புகாரை பதிவு செய்த அதிகாரி நான் தான். முதல் விசாரணையை நான் தான் மேற்கொண்டேன் என்றால் சரிதான். விசாரணையை மேற்கொள்வற்கு முன்பாக புகாரில் உள்ள சங்கதிகளை நன்றாக படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் உள்ள சங்கதிகளை குறித்து விசாரிக்க வேண்டும் என்றால் விசாரிக்க வேண்டும். முறையான சட்டப்பூர்வமான வழக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சின்னச்சாமி புகாரை அளிக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் அரசு மருத்துவனையில் வைத்து இந்த புகார் பெற்றதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை